28th March 1964]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மதுரை மாநகரத்தில் இடம் கிடைக்காத காரணத்தால் விவசாயப் பள்ளி அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். மதுரையில் இடம் மதுரை நகரை ஒட்டி இருக்க வேண்டுமா? எத்தனை ஏக்கர் வேண்டும். தண்ணீர் வசதி எவ்வளவு வேண்டும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

கனம் சபாநாயகர் : இந்த விவரங்களை எல்லாம் ஆபீசில் சென்று கேட்டுக் கொள்ளலாம். சட்டசபையில் கேட்க வேண்டிய தில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இதிலே பயிற்சி பெறும் மாணவர்களை கிராம சகாயக்குகளாக நியமிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : லாயக்கு உள்ளவர்களை கிராம சகாயக்கு களாகவும் தேர்ந்தெடுக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : அந்த மாணவர்களுக்கு நிலங்களிலும் நேரடியாக பயிற்சி கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்க விதைப் பண்ணைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : 1964-65-ல் புதிதாக ஏற்படுத் தப்பட இருக்கிற புதிய விவசாயப் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே ஏற்படுத்தப்படும்? அதிலே திண்டிவனம் தாலூகா இடம் பெற்றிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : ஆரம்பிக்கப்பட்ட விவசாயப் பள்ளி களில் இதுவரை எத்தனை மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பள்ளிகளில் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் பயிற்சி அளிக்கப் படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் பக்கத்தில் இருந்தால் அங்கும் அவர்களைக் கூட்டிக் கொண்டு போவார்கள்.

Quarters in Rubber Plantations

* 430 *Q.*—SRI R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether staff quarters for the officers of Rubber plantations in Kanyakumari district have been constructed; and

[28th March 1964

(b) whether any quarters for the Labourers have been constructed: and if not will the Government be pleased to take early steps to construct quarters for the labourers?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) சில அதிகாரிகளுக்காக குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

(இ) அரசாங்க ரப்பர் தோட்டத்திலேயே வசிக்க எந்தத் தொழிலாளியையும் வேலைக்கு அமர்த்தாததால், அவர்களுக்குக் குடியிறுப்புகள் கட்டித் தரும் கேள்விக்கு இடமில்லை.

Production of plantain fruit

*431 Q.—SRI S. RAMASAMY: Will the Hon. the Minister

SRI K. A. MATHIALAGAN:

for Home be pleased to state:

(a) whether the Indian Council of Agricultural Research has increasing the production of plantain fruit; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b): A statement* is placed on the table of the House.

(அ) & (இ) சபை முன்பு ஓர் அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.

திரு. வி. எஸ். எஸ். மணி: வாழைப்பழங்களுக்கு ரஷ்யா போன்ற நாடுகளில் அதிகக் கிராக்கி இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அதை ஏற்றுமதி செய்ய என்ன வசதிகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன? ஏற்றுமதி செய்யக்கூடிய வாழைப பழங்கள் குறிப்பில் இருப்பது போல் வெட்லாண்ட் பனுவா, அல்லது ஹில் (Hill Banana) பனுவா? இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? எதற்கு அந்த நாடுகளிலே கிராக்கி இருக்கிறது? இந்த வாழைப்பழங்களை அனுப்புவதால் அந்நிய செலவாணியைச் சம்பாதிக்க வழி இருக்கிறது. ஆனுல் இந்தியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சுரல் ரிசர்ச்சுக்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம் மத்திய அரசாங்கமும் 50 சதவிகிதம் நம் ராஜ்யமும் ஏற்றுக் கொள்கிறது. வாழைப்பழங்களை அந்நிய நாட்டுக்கு அனுப்புவதால் வரக்கூடிய அந்நியச் செலாவாணியை மத்திய அரசாங்கம் பெறுகின்றபோது நம்முடைய அரசாங்கம் எதற்காக 50 சதவிகிதம் செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும்?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்கள் நீண்டதொரு கேள்வியைக் கேட்டிருக்கிருர்கள். மத்திய அரசாங்கமே ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தி ஆந்திரா, கேரளா, மைசூர், தமிழ் மாநிலங்களை இணைத்திருக்கிருர்கள். அந்தக் கார்ப்பரேஷன் மூலம் ஜப்பான், ரஷ்யா, மிடில் ஈஸ்ட் பகுதிகளுக்கு வாழைப் பழங்களை அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

* Printed as Appendix III on page 579–581 infra.